[திரு. ஆர். எம். வீரப்பன்] [1987 நவம்பர் 17

கூடாது என்றும் தெரிவித்து இருக்கிறார்கள். ஆகவே அவர்கள் வெளியிலே போய் இருக்கக்கூடும். இல்லையானால் அந்த ரிமாண்டு காலம் முடிவுற்ற உடனே, இயற்கையாகவே அவர்கள் வெளியிலே போய் விடுவார்கள்.

4. அறிவிப்புகள்

(அ) பேரவை அலுவல்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்றைக்கு 12 சட்ட முன்வடிவுகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட உள்ளதால், பேரவை மாலையிலும் கூடும். காலை நிகழ்ச்சிகள் 1-30 மணிக்கு முடிவுற்று பேரவையின் மாலை நிகழ்ச்சிகள் மாலை 4-00 மணிக்கு கூடும்.

3. கவன ஈர்ப்பு—தொடர்ச்சி.

(இ) சைதை பகுதி தனியார் தெருக்களிலுள்ள கழிவு நீரை அகற்றுதல் குறித்து.

*திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "சைதை பகுதியில் உள்ள தனியார் தெருக்களில் அடிப்படை வசதிகள் செய்யப்பட வேண்டுமென்று பிறப்பிக்கப்பட்ட அரசாணைப்படி, சைதை பகுதியின் பாதி தெருக்களுக்கு மேலாக பாதாள சாக்கடை திட்டப்பணிகள் முடிவுற்றும் மீதமுள்ள தாழ்வான பகுதிகளில் உள்ள தனியார் தெருக்களில் கழிவுநீர் அகற்றும் வசதி மேற்கொள்ளப்படாததால் அப்பகுதி வாழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்கள் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(முற்பகல் 11-40)

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.